**செ. வெ. எண்: 581** **நாள்: 03.10.2011**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.10.2011) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் 1 கோடியே 11 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்பு பணியாளர்களுக்கான குடியிருப்புகளை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறையின் சார்பில் 1 கோடியே 11 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 11,724 சதுர அடி பரப்பளவில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி ஒரு தீயணைப்பு நிலைய அலுவலர் மற்றும் 20 தீயணைப்பு பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளை உடுமலைப்பேட்டை தீயணைப்பு அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கு உடனடியாக வழங்கிட ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை இயக்குநர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 3.10.2011